1973 மார்ச் 26]

Iron deposits in Tiruvannamalai area

* 515.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any team of experts from Japan has undertaken a survey of the iron potential in Tiruvannamalai area in North Arcot district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவண்ணாமலை இரும்புத் தாதுக்களைப் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ள ஜப்பானைச் சேர்ந்த மாருபேனி நிறுவனத்தார் (Marubeni Corporation) சில வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்றை அனுப்பிவைத்தது. அக்குழு திருவண்ணாமலைப் பகுதிகளில் கிடைக்கும் இரும்புத் தாது காந்த முறையில் பிரிக்கப் படுவதற்கு ஏற்றதென்று அறிவித்தது. அவர்கள் கோரிக்கைக்கிணங்க மேற்கொண்டு சோதனைகள் நடத்த இரும்புத் தாதுவின் மாதிரிப்படிவங்கள் மாருபேனி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அங்கே கிடைக்கக்கூடிய இரும்பிலிருந்து அந்தப் பகுதியில் ஒரு சிறிய ஸ்டீல் பாக்டரி அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதியில் 140 மில்லியன் டன் 33·35 இரும்புத் தாது எச். வி. கன்டன்ட் உள்ள இரும்புத் தாது கிடைக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை உபயோகித்து ஒரு மினி ஸ்டீல் பிளான்ட் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு உள்ளது. இன்வஸ்டிகேஷன் முடிவு தெரிந்ததற்குப் பின்னால்தான் மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை தொடரவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஜப்பானியக் குழு வந்து திருவண்ணாமலை, போளூர் போன்ற பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனதற்குப் பின்னாலே அந்தப் பகுதி மக்கள் ஒரு மினி ஸ்டீல் பிளாண்ட் அங்கே வரப்போகிறது என்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அந்த முடிவு வருவதற்குள்ளாக மத்திய அரசோடு பேச்சு வார்த்தை மேற்கொண்டு விரைவாக அதைக் கொண்டு வர அரசு முயற்சியை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சேலத்திலே கிடைத்ததும் இதே போன்ற இரும்புதான். 140 ஆண்டுகால முயற்சியின் விளைவாக அது வந்திருக்கிறது. இந்தத் திருவண்ணாமலை இரும்பு இப்போது தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது இறுதி வடிவம் காணு

வதற்கு முன்னாலே மாநில அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து இருக்கிறது. நிபுணர்கள் ஆராய்வதற்காக அந்த இடத்தில் டிரில்லிங் ஆபரேஷன் செய்யப்பட்டு, அங்கே எடுக்கப்பட்ட இரும்புத் தாது சேலம் இரும்புத்தாது போல் இருக்கிறது என்று அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிபுணர்களின் அறிக்கையை மாநில அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரத்தில் வந்துவிடும் போல் இருக்கிறது. அந்த ஊர் அமைச்சரே வந்து விட்டார் பதில் சொல்வதற்கு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Harur taluk in Dharmapuri district is very close to Tiruvannamalai and it forms a geographical unit. May I know from the Hon. Minister whether the experts have investigated that area also ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓசூர் வட்டத்தைப்பற்றி என்னிடத்தில் குறிப்பு இல்லை. தமிழ்நாடு பூராவும் யு. என். டி. பி. திட்டத்தில் சர்வே செய்யப்பட்டதில் திருவண்ணாமலையில் உள்ள இரும்புத் தாதுதான் (Economically viable expolitation) என்ற முறையில் வாய்ப்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஜப்பான் நிபுணர்கள் இங்கே கண்டுபிடித்துள்ள இரும்புத் தாதுவைப் பயன்படுத்த மினி ப்ளாண்ட் ஏற்படுத்துவது முன் பின்னாக இருந்தாலும் உடனடியாக அந்த இரும்புத் தாதுக்களை வெட்டி எடுக்கவாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இங்கே வெட்டி எடுக்கப்படுகிற இரும்புத் தாதுவைப் பயன்படுத்த இங்கேயே தொழிற்சாலை வரவேண்டுமென்பது கொள்கை. அந்த தொழிற்சாலை உருவான பிறகுதான் இரும்பு தாதுவை வெளியில் எடுக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரும்பு தாதுப் பொருள் பரிசோதனைக்கு நிபுணர்களுக்கு அனுப்பியிருப்பதாகக் கூறினார்கள். எப்போது அனுப்பப்பட்டிருக்கிறது? அவர்களது முடிவு எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்தத் தேதி என்கிற விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை. 1972 இல் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் மூலம் ட்ரில்லிங் ஆப்பரேஷன் மூலம் இந்த தாதுப்பொருள் இருப்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சில மூலப் பொருள்கள் மற்ற மாநிலங்களில் இருந்து நமக்கு வருகிறது. அதேபோல வேறு இடத்தில்

இருக்கக்கூடிய உருக்குத் தொழிற்சாலைக்கு நாம் இங்கே இரும்பு தாதுப் பொருளை வெட்டி எடுக்கத் தொடங்கினால் அனுப்பி வைக்கலாம் அல்லவா? ஆகவே, அவற்றை வெட்டி எடுக்க அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட மாநிலத்தில் நிறைய ஹாமடைட் ஓர் கிடைப்பதனால், நம் மாநிலத்தில் கிடைக்கிற மாக்னடைட் ஓர் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

குளூகோஸ் தொழிற்சாலை

*516 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. கி. செயராமன் : } மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளூகோஸ் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : குளூகோஸ் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெற்றே துவங்க வேண்டும் என்கிற தன்மை இருக்கிறது. இன்றைக்கு மாநிலத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள், குழந்தைகள் ஆகியவர்களுக்கு மலிவான விலையில் குளூகோஸ் கிடைக்க வசதியாக மத்திய அரசிடம் அனுமதி பெற்று, மாநில அரசே அங்கங்கே இண்டஸ்ட்ரியை ஏற்படுத்த தொழிற்சாலை வைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது உடுமலைப்பேட்டையில் ஒன்றும், சென்னையில் ஒன்றும் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உடுமலைப்பேட்டையில் ஒன்று நடக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இனிமேலாவது பொதுத் துறையில் இல்லாவிட்டாலும், தனியார் துறையில், அல்லது தனியார்—அரசு கூட்டுத்துறையில் துவங்க ஊக்கமளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே – நாள் ஒன்றுக்கு 50 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும், ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் தயாரிக்கிற ஒரு தொழிற்சாலையும் இரண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன்.

திரு. வி. பழனிவேலு : இது குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் மிகவும் தேவையாக இருப்பதாலும் சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு நிறைய உற்பத்தி செய்யப்படுவதாலும், அதிலிருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சு தரமுள்ளதென கண்டுபிடிக்கப்பட்டதால் க்ளூகோஸ் பாக்டரியை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?